# ஸமிதாதானம் - அர்த்தம்

சோகத்தூர் ராமானுஜாசார்யர்

உபநயனம் ஆன ப்ரஹ்மசாரி நாள்தோறும் இரண்டு வேளையும் ஸமிதாதானம் செய்ய வேண்டும். அதற்கு உபயோகப்படும் மந்த்ரங்களின் பொருளை இங்கு தருகிறோம்.

ஸமிதாதானம் என்றால் ஸமித்தை அக்னியில் சேர்த்தல். ஸமித்தாவது சில யஜ்ஞத்துக்கேற்ற மரங்களின் கிளையின் ஒரு சாண் நீளமுள்ள சுள்ளி. அது கிடைக்காவிடில் தர்ப்பத்தைச் சேர்க்கலாம். இங்கு பனிரெண்டு மந்த்ரங்கள் உள்ளன. ஒவ்வொரு மந்த்ரத்தைச் சொல்லி ஒவ்வொரு ஸமித்தை 'ஸ்வாஹா' என்றபோது அக்னியில் சேர்க்க வேண்டும்.

முதலில் பரி த்வா என்கிற மந்த்ரத்தால் (நான்குபுறமும் உள்ள அக்னியை ஒன்றாகச் சேர்ப்பது போல் பரிஸமூஹனம் செய்ய வேண்டும்.) அக்னிக்கு நாற்புறமும் ஶுத்தி செய்ய வேண்டும். (அக்னியைச் சுற்றி நன்கு நீரால் துடைக்க வேண்டும்.) பிறகு மந்த்ரம் ஒன்றும் இல்லாமல் அக்னியைப் பரிஷேசனம் செய்ய வேண்டும். இதன் பொருளாவது -

ஹே அக்னி பகவானே! நான் உம்மை ஆதரத்துடன் நான்கு பக்கங்களிலும் இந்த தீர்த்தத்தால் நன்கு துடைத்து ஶுத்தி செய்கிறேன். எனக்கு உமது அநுக்ரஹத்தால் நீண்ட ஆயுளும், நற்செல்வமும் வளரட்டும். நல்ல குழந்தை பிறந்து அதனால் நல்ல குழந்தை உள்ளவனாகவும், பேரனால் நல்ல பேரன் உள்ளவனாகவும், வர்ச்சஸ்ஸினால் நல்ல வர்ச்சஸ் (உயர்ந்த ஒளி) உள்ளவனாகவும், புஷ்டிகரமான பொருட்களால் ஸுபோஷனாகவும் (நல்ல வளர்த்தி உள்ளவனாகவும்), வீட்டினால் நல்ல வீடுள்ளவனாகவும், நல்ல பாதுகாப்பை உயர்ந்த ஆசார்யனால் பெற்று ஸுபதியாகவும், நல்ல புத்திக்கூர்மையால் (க்ரஹண, தாரண ஶக்திகள்) ஸுமேதஸ்ஸாகவும், என்னுடன் கூட அத்யயனம் செய்யும் (படிக்கிறவர்களுடன்) ப்ரஹ்மசாரிகளால் நல்ல வேதாத்யயன ஶீலனாகவும் ஆகும்படி செய்திட வேண்டுகிறேன், என்று.

1. ஓ அக்நிதேவனே! மேன்மை வாய்ந்தவரும், ஒளியுள்ளவரும், எல்லாவற்றையும் அறிகிறவரும் அளிப்பவரும், உபாஸிப்பவரை மேல்நிலைக்கு அழைத்துச் செல்பவருமான உமக்கு இந்த ஸமித்தை ஸமர்ப்பிக்கிறேன். இத்தால் நீரே எப்படி நன்கு விளங்குகிறீரோ அப்படியே என்னை தீர்க்காயுஸ், வர்ச்சஸ், லாபம், புத்திக்கூர்மை, ப்ரஜை, பஶு, ப்ரஹ்மவர்ச்சஸ், உணவு உட்கொள்ளும் திறன் முதலியவற்றால் நன்கு விளங்கிடச் செய்ய வேண்டுகிறேன்.

2. ஓ ஸமித்தே! நீ அக்நி ஜ்வலிக்க விறகு போலிருக்கிறாய். உன்னை ஹோமம் செய்யும் நானும் அதனால் நன்கு வ்ருத்தி அடைவேனாக. இங்கு பன்மை ஒருமையினிடத்தில் வழங்கப்பட்டுள்ளது.

3. ஓ ஸமித்தே! அக்நியை ப்ரகாஶிப்பிக்கும் உன்னால் நாங்களும் நன்கு வளரக் கடவோமாக. இங்கும் முன்போல் பன்மை என்றறிக.

4. ஓ ஸமித்தே! நீ அக்நியின் தேஜஸ்ஸுக்குக் காரணம் ஆகிறாய். ஆகவே என்னிலும் தேஜஸ்ஸை (காந்தியை) நிலையாக ஏற்படுத்தக் கடவாய்.

5. இப்பொழுது நான் இந்த ஸமிதாதானமாகிய கர்மாவைச் செய்கிறேன். இதாலெனக்கு கர்மஶ்ரத்தை வளரவேண்டும். (ரஸமயனான எம்பெருமானுடன் சேர்வதாகிற தொடர்பு உண்டாக வேண்டும்). உமக்கு பாலாலும், நெய்யாலும் ஹோமம் செய்பவனாயிருக்க வேண்டும். அதாலெனக்கு ப்ரஹ்மவர்ச்சஸ் வளர வேண்டும்.

6. அக்நிதேவனே! என்னை ப்ரஹ்மதேஜஸ், ஸந்ததி மற்றும் செல்வம் இவைகளுடன் கூடினவனாகச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

7. இந்த ஹோமம் செய்யும் என்னை இந்த்ரன் முதலிய தேவர்களும் ரிஷிகளுடன் கூட அறிந்து கொள்ளட்டும். (அவர்கள் இந்த கர்மத்துக்கு ஸாக்ஷியாக இருந்து என்னை அனுக்ரஹிக்கட்டும்).

8. பெருமை வாய்ந்தவரும், ஸ்வர்கத்தில் அரக்கர்களை அழிக்கும் 'நாகன்' என்று பெயர் கொண்ட அக்நிதேவனின் பொருட்டு இந்த ஸமித்தை ஸமர்ப்பிக்கிறேன்.

9. ஆகாயத்துக்கும், பூமிக்கும் (ஸர்வவ்யாபக பகவானின் பொருட்டு) இந்த ஸமித்தை அளிக்கிறேன்.

10. ஓ அக்நிதேவனே! உமக்கு இந்த ஸமித்து. இதனால் நீர் நன்கு வளர்ந்து பூர்ணராக ஆகும். உம் அனுக்ரஹத்தால் நானும் வளர்ச்சியடைந்து பூர்ணனாக ஆவேனாக.

11. ஓ அக்நிதேவனே! யாராவது உலகிலுள்ள எல்லா பொருள்களையும் அடையத்தகுந்தவனான என்னை நான் அவற்றைப் பெறக்கூடாதென (தான் அவற்றை அடைய) நினைக்கிறானோ அவனை அந்த பாக்யம் இல்லாதவனாக்கி எனக்கே அவற்றை அளித்திடும்.

12. ஓ அக்நிதேவனே! நான் இந்த ஸமிதாதான கர்மாவால் எல்லா வ்ரதங்களையும் (என் ப்ரஹ்மசர்ய வ்ரதானுஷ்டானத்தில் ஏதாவது ஏற்றக்குறைச்சல்கள் இருப்பினும்) சரிவர முடித்ததாக ஆகுக.

ஆஹுதி (ஹோமம்) முடிந்தது. பிறகு முன்போல் மந்த்ரமில்லாமல் பரிஷேசனம்.

அக்நியில் ஒரு ஸமித்தை சேர்த்து, எழுந்து, यत्ते अग्ने तेजस्तेनाहं तेजस्वी भूयासं यत्ते अग्ने वर्चस्तेनाहं वर्चस्वी भूयासं यत्ते अग्ने हरस्तेनाह हरस्वी भूयासम् ॥ (तै.सं. 3-5-11) என்ற மந்த்ரத்தைச் சொல்ல வேண்டும். இதினர்த்தம் வருமாறு -

ஓ அக்நிதேவனே! உன்னிடமுள்ள தேஜஸ்ஸினால் நான் தேஜஸ்வியாகவேண்டும். உமது வர்ச்சஸ்ஸால் நான் வர்ச்சஸ்வியாகவேண்டும். உமது பாபத்தை அகற்றும் ஶக்தியால் நான் அந்த ஶக்தி உள்ளவனாக ஆகவேண்டும், என்று.

பிறகு, मयि मेधां मयि प्रजां मय्यग्निस्तेजो दधातु मयि मेधां मयि प्रजां मयीन्द्र इन्द्रियं दधातु मयि मेधां मयि प्रजां मयि सूर्यो भ्राजो दधातु ॥ (तै.सं. 3-3-2) என்ற மந்த்ரத்தைச் சொல்ல வேண்டும். இதினர்த்தம் வருமாறு -

அக்நி எனக்கு மேதையையும், ப்ரஜையையும், தேஜஸ்ஸையும் வழங்கட்டும். இந்த்ரன் எனக்கு மேதையையும், ப்ரஜையையும், இந்த்ரியத்தையும் உண்டு பண்ணட்டும். ஸூர்யன் எனக்கு மேதையையும், ப்ரஜையையும், ப்ரகாஶமான வர்ச்சஸ்ஸையும் அளிக்கட்டும், என்று.

मन्त्रहीनं क्रियाहीनं भक्तिहीनं हुताशन । यद्धुतं तु मया देव परिपूर्णं तदस्तु ते ॥

प्रायश्चित्तान्यशेषाणि तपःकर्मात्मकानि वै । यानि तेषामशेषाणां कृष्णानुस्मरणं परम् ॥

ஓ அக்நிதேவரே! மந்த்ரம், க்ரியை, பக்தி இவைகள் குறைவாக இருந்தாலும், நான் செய்த இந்த ஹோமம் பரிபூர்ணமாக ஆகட்டும்.

தபஸ், கர்மா வடிவான எவ்வளவு ப்ராயஶ்சித்தங்கள் உண்டோ அவைகளுக்குள் ஸ்ரீக்ருஷ்ணனை நினைப்பதே சிறந்த ப்ராயஶ்சித்தமாம்.

பிறகு நமஸ்காரம் செய்து அபிவாதனம் பண்ணவேண்டும்.